பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 01 செவ்வாய்க்கிழமை 14.05.2024 கதிர் 188

## இது ரகசியம் அல்ல!

இது கட்சிகள் மீதான வழக்குக் காலம் என்று ஏற்கனவே ஒருதடவை இங்கு சொல்லியிருந்தேன். தமிழ் அரசுக் கட்சி மட்டுமல்ல, சுதந்திரக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி என்று எல்லாக் பல கட்சிகளும் நீதிமன்றத்தில்தான் நிற்கின்றன என்ற தகவலைச் சொல்லியிருந்தேன்.

அவற்றில் தமிழ் அரசுக் கட்சி மாதிரி நீதிமன்றத்தில் வழக்கை எதிர்கொண்டு விரைவில் முடிவெடுத்துக்கொள்வது என்று தீர்மானிப்பது ஒருவகை என்றால், வழக்குக்கு மேல் வழக்கு, வழக்குப் போட்டவர் மீதும் வழக்கு என்று மாறி மாறி வழக்குப் போட்டே கட்சியைக் காப்பற்ற முயற்சிப்பது மற்றொரு வகை. சுதந்திரக் கட்சி வழக்கில் அதுதான் நடக்கிறது. இதெல்லாவற்றையும் விட இன்னொரு விதத்திலும் வழக்கை எதிர்கொள்கின்றன கட்சிகள் என்பதுதான் இன்றைய தகவல்.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிரான வழக்கில் பிரதிவாதிகளுக்கான அழைப்பாணையை இன்னும் அவர்களிடம் சேர்ப்பிக்க முடியவில்லை. கூட்டணி அலுவலகத்திற்குச் சென்றால் 2

## ஆண் பொலிஸாரினால் இரவில் பெண்கள் கைது

# நாடு எங்கே போகிறது?

## நீதியரசர் விக்னேஸ்வரன் கேள்வி

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தையொட்டி 'முள்ளிவாய்க்கால் கஞ்சி' வழங்கிய பெண்கள் பொலிஸாரால் வலுக்கட்டாயமாக கைது செய்யப்பட்டு இழுத்துச் செல்லப்படமை தொடர்பில் கேள்வி எழுப்பியுள்ள முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன், இரவில் ஆண் பொலிஸாரால் பெண்கள் கைது செய்யப்படுகின்றனர், இந்த 2

## யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று முள்ளிவாய்க்கால் கஞ்சி

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி நேற்று விநியோகிக்கப்பட்டது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக விஞ்ஞான பீட நுழைவாயிலில் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகிக்கப்பட்டது.

வடக்கு கிழக்கின் பல பகுதிகளிலும் பரவலாக தமிழ் இனப்படுகொலையின் நினைவாக முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டு வருகின்றது. அரசியல் கட்சிகள், தன்னார்வலர்களினால் இந்தச் செயற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.

## சாட்சியம் வழங்கக்கூடாதென பொலிஸாரினால் அச்சுறுத்தல்

### விபத்து சாட்சிகள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம் புன்னாலைக் கட்டுவன் பகுதியில் மே 10 அன்று பொலிஸார் மோட்டார் சைக்கிளை உதைத்து வீழ்த்தியதனால் நிலை தடுமாறி மின்கம்பத்தில் மோதி உயிரிழந்தார் எனக்கூறப்படும் செல்வநாயகம் பிரதீபனின் இறப்புத் தொடர்பில் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கக்கூடாது என்று சாட்சிகள் மிரட்டப்படுகின்றனர் என்று குற்றச்சாட்டு 2

## பொலிஸார் சென்று எதைச் சொன்னாலும் அதை நம்ப நீதிமன்ற சுயாதீனம் பறிக்கப்பட்டுள்ளதா?

### நாடாளுமன்றத்தில் கஜேந்திரன் எம்.பி. கேள்வி

பொலிஸார் நீதிமன்றங்களுக்குச் சென்று எதைச் சொன்னாலும் அதை அப்படியே ஏற்றுக்கொண்டு செயற்பட வேண்டிய நிலைக்கு நீதிமன்றங்களின் சுயாதீனம் பறிக்கப்பட்டுள்ளதா? எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற நிதிக்கட்டளைகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது தமிழ்த் தேசத்தின் மீதான ஒடுக்குமுறைகள் தொடக்கத்திலிருந்து இன்று வரை எல்லை கடந்து செல்கின்றன. எமது தேசத்தின் மீது இலங்கை அரசு இனப்படுகொலையை அரங்கேற்றி 15 ஆண்டுகள் 2

### திருகோணமலை மாவட்டம் சேனையூரில்

## முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கிய 4 பேர் கைது

### அனைவருக்கும் மே 27 வரை விளக்கமறியல்

திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேனையூர் பகுதியில் நீதிமன்றத் தடையை மீறி முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி பரிமாறிய குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்களை மே 27 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மூதூர் நீதிவான் மன்றம் உத்தரவிட்டுள்ளது. நீதிபதி தஸ்லீம் பௌசான் இந்த உத்தரவை வழங்கினார்.

சமூகச் செயற்பாட்டாளரான விஜிதா (வயது 40), அவரது மகளான பல்கலைக்கழக மாணவி தேமிலா (வயது 22), சமூகச் செயற்பாட்டாளரான சுஜானி (வயது 40), தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக் கட்சியைச் சேர்ந்த பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் 8

## டயானாவுக்கு இராஜதந்திர கடவுச்சீட்டு: முழு விசாரணை நடத்தப்படவேண்டும்

### முஜிபுர் ரஹ்மான் எம்.பி. நாடாளுமன்றில் வலியுறுத்து

நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகே இலங்கையின் குடியுரிமை அற்றவராக இருந்தபோதும் அவருக்கு இராஜதந்திரிக்கான கடவுச்சீட்டு வழங்கப் பட்டது குறித்து முழுமையான விசாரணை நடத்தப்படவேண்டும் என்று எதிர்க்கட்சி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஏற்றுமதி இறக்குமதி தொடர்பான கட்டளைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடுவதற் 8

### ஒன்றரை லட்சம் தமிழர்கள் கொல்லப்பட காரணமான

## ராஜபக்ச குடும்பத்தினர் ஒருபோதும் நிம்மதியாக இருக்கப்போவதில்லை

### நாடாளுமன்றத்தில் சாபம் விட்டார் சிறீதரன் எம்.பி.

ஒன்றரை லட்சம் தமிழர்கள் கொல்லப்பட்டதற்குக் காரணமாக இருந்த ராஜபக்ச குடும்பத்தை சேர்ந்தவர்கள் எந்தக் காலத்திலும் நிம்மதியோடு இருக்கப்போவதில்லை; உறங்கப்போவதில்லை என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற நிதிக்கட்டளைகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் 8

## பெருந்தோட்ட தொழிலாளர் சம்பள அதிகரிப்பு அவசியம்

### அமைச்சர் ஜீவன் தொண்டமான் அழுத்தம்

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு குறித்து ஆளும் தரப்பு விடுத்துள்ள வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய பெருந்தோட்ட நிறுவனங்கள் செயற்படவேண்டியது அவசியமென வலியுறுத்திய நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான், அதற்கு எதிராக கம்பெனிகள் மேற்கொள்ளும் 2

## ஜனாதிபதித் தேர்தலை வெல்ல ரணில் பல தந்திரங்களில் ஈடுபட முயல்கிறார்

### திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. தெரிவிப்பு

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக ரணில் விக்கிரமசிங்க தந்திரங்களில் ஈடுபட முயல்கிறார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றஞ் சாட்டினார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டுவதற்கு பல்வேறு தந்திரங்களில் ஈடுபட முயற்சிக்கின்றார். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை பெரும்பான்மையான மக்களை வெற்றிபெறச் செய்வர். ஜனாதிபதி 8

## அமெரிக்க இராஜாங்க செயலர் ஜனாதிபதியுடன் நேற்று பேச்சு



இலங்கைக்கு வருகை தந்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் டொனால்ட் லு, நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் 2

## இனி இது .....

அது எப்போதுமே பூட்டிக்கிடப்பதால் அழைப்பாணையைக் கையளிக்க முடியவில்லையென்று நீதிமன்றத்திற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.

தமிழர்விடுதலைக்கூட்டணியின் மத்திய குழுக் கூட்டம் மார்ச் 16 வவுனியாவில்இடம்பெற்றது. அந்தக் கூட்டத்தில் கட்சி தொடர்பில் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டதுடன். கட்சிக்குப் புதிய தலைவர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டதுடன்நிர்வாகிகள் சிலரும் தெரிவு செய்யப்பட்டனர். இதனை எதிர்த்து கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களான சுதாகரன் மற்றும் சூரியப்பிரபாவினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கில் நேற்றுத் தவணை. வவுனியா மாவட்ட நீதிமன்றதில் விசாரணை. ஆனால் எதிராளிகள் எவரும் வரவில்லை. இன்றைய தவணைக்கு அவர்கள் சமூகமளிக்கும் விதத்தில் அவர்களுக்கு அழைப்பாணை அனுப்ப நீதிமன்றம் கடந்த தவணையிலேயே உத்தரவிட்டிருந்தது. இருப்பினும் அந்த அழைப்பாணையை வழங்கக் கூடிய விதத்தில் கட்சி அலுவலகம் திறந்திருக்கவில்லை என்றே நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து ஜூன் 1-9 அன்று வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிவித்த நீதிபதி, அதற்கிடையில் அழைப்பாணையை உரியவர்களிடம் சேர்ப்பிக்கவும் உத்தரவிட்டார்.

கட்சியின் பதிவு செய்யப்பட்ட முகவரியாக அதன் அலுவலகமே காணப்படுவதால் நீதிமன்றம் மூலமாக அன்றி வேறு தரப்பினர் மூலம் இந்த அழைப்பாணையை அனுப்புமாறு வழக்காளி தரப்பு நீதிமன்றத்தைக்கேட்டுக்கொண்டது.

வழக்கை எதிர்கொள்ளாது இப்படிஎத்தனைநாட்களுக்குத்தான் கட்சிக்காரர்கள் ஓடி ஒளிக்கப் போகின்றார்கள் என்று பார்க்கலாம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நாடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடு எங்கே போகின்றது என்றும் கண்டித்துள்ளார்.

இது தொடர்பில் நீதிய ரசர் விக்னேஸ்வரன் விடுத் துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இரவில் ஆண் பொலிஸாரால் பெண்கள்கைதுசெய்யப்படுகிறார்கள்.

இந்த நாடு எங்கே போகிறது?

2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி இறந்தவர்களின் நினைவாக கஞ்சி வழங்கிய சில பெண்கள் பொலிஸாரால் வலுக்கட்டாயமாகக் கைது செய்யப்பட்டு அவர்களது வீடுகளில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இவ்வாறு கஞ்சி விநியோகம் செய்வது ஆரோக்கியமற்றது என பொலிஸாரால் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டு அதற்கெதிராக தடைஉத்தரவுபெறப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. உண்மை அதுவானால் அந்தத் தடை உத்தரவு பொதுச் சுகாதார அலுவலர்களாலேயே பெறப்பட்டிருக்கவேண்டும். அதில் பொலிஸார் எதற்கு?

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் அம்பிகா சத்குணநாதன் கேட்டது போல், மே தினத்திலோ அல்லது வெசாக் தினத்திலோ பொலிஸார் அத்தகைய உத்தரவுகளைப் பெறுவார்களா. 2009ஆம் ஆண்டு மே 18ஆம் திகதி அல்லது அதனையொட்டிய நாட்களில் நிகழ்ந்ததமிழ்இனப்படுகொலையை மூடிமறைக்கும் முயற்சியே இது.

இத்தகைய தேவையற்ற, சந்தேகத்திற்குரிய செயல்களை அரசும்,ஆளும்தரப்பும்எந்தளவுக்கு மேற்கொள்கின்றனவோ, அவ்வளவு அதிகமாக, இறந்தவர்களை நினைவுகூர்ந்து, சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் நமது மக்கள் உறுதியாக இருப்பார்கள்.

இந்த அப்பாவி, உதவியற்ற பெண்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட எந்தவொரு அறிக்கையையும்திரும்பப்பெற்றபின்னர் அவர்களை விடுவிப்பதற்கான உத்தரவை ஜனாதிபதி விடுப்பார் என்று நம்புகின்றேன். 2009 ஆம் ஆண்டு மே 18 ஆம் நாளை எனது தமிழ் சகோதரர்கள் கூடுதலான உற்சாகத்துடனும் உறுதியுடனும் நினைவுகூரட்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கையின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்துள்ளன .ஆனால் இன்றுவரை படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை. இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட மற்றும் கருணா, பிள்ளையான்,ஈ.பி.டி.பி. யினரால் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டவர்களை தேடி அவர்களின் உறவுகள் இன்றும் அலைந்து கொண்டிருக்கின்றனர்.தொடர் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள்.

இவ்வாறான நிலையில் எங்கள் மீது நடத்தப்பட்ட இனப்படுகொலையை நினைவு கூர்ந்து அதற்கான நீதியினைக்கோரும் விதமாக வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் இனப்படுகொலை வாரம் அனுஷ்டிக்கின்றனர். 2009 ஆம் ஆண்டில் உணவை ஆயுதமாகக் கொண்டு கோத்தபாய ராஜபக்சவும் அவரது அண்ணன் மஹிந்த ராஜபக்சவும் தமிழ் மக்களை பட்டினிச் சாவுக்குள் தள்ளிய போது தமிழ் மக்கள் கஞ்சி குடித்துத்தான் உயிர்பிழைத்தார்கள்.

இதனைநினைவுகூரும்விதமாக மக்களுக்கு கஞ்சி கொடுக்கும் நிகழ்வை இந்த வாரம் நாம் அனுஷ்டிப்பது வழமை .அந்த வகையில்கடந்தஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் கட்டைப்பறிச்சான் பகுதியில் புவன கணபதி ஆலயத்தில்கஞ்சிகொடுக்கும்நிகழ்வு நடைபெற்றபோது அந்த நிகழ்வில் ஈடுபட்டமைக்காக எமது கட்சியின் திருகோணமலை மாவட்ட உதவி செயலாளர் ஹரிஹர குமாரும் 3 பெண்களும் கைது செய்யப்பட்டு மூதூர் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

இதுதான் இந்த நாட்டின் நல்லிணக்கம், பிற இனங்கள், மதங்களைமதிக்கும்பண்பு. ஆலயத்தில் கஞ்சி காய்ச்சப்பட்டமைக்காக இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது என்பது மிகவும் வேதனைக்குரியது. அவர்கள் 4 பேரும் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும்.

இந்தச் சம்பவத்தின் மூலம் வடக்கு மற்றும் கிழக்கில் நீதிமன்றங்கள் இனவாத பொலிஸாரின் கட்டளைகளுக்குப் பணிந்து செயற்படுகின்றனவா என்ற கேள்வி எழுந்துள்ளது. பொலிஸார் நீதிமன்றங்களுக்குச் சென்று எதைச் சொன்னாலும் அதை அப்படியே ஏற்றுக்கொண்டு செயற்பட வேண்டிய நிலைக்கு நீதிமன்றங்களின் சுயாதீனம் பறிக்கப்பட்டுள்ளதா? கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரின் விண்ணப்பத்தில் பொதுமக்களை ஒன்று கூட்டுவதும் அவர்களுக்கு உணவு,கஞ்சி பரிமாறுவதும் சுகாதாரச் சீர்கேட்டை ஏற்படுத்தும் எனக்கூறி பொலிஸார் கோரிய தடை உத்தரவுக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது .

அப்படியெனில் எதிர்வரும் வெசாக்தினங்களில்"தன்சல்"உணவு வழங்கும் செயற்பாடுகளைச் சுகாதார சீர்கேட்டை காரணம் காட்டி தடுத்து நிறுத்துமாறு பொலிஸார் நீதிமன்றங்களை கோருவார்களா? அதனைஏற்றுநீதிமன்றங்கள் தடையுத்தரவு வழங்குமா? அவ்வாறான உணவு வழங்கலை தடுத்து நிறுத்த உங்களால் முடியுமா? தமிழர்களுக்கு ஒரு நீதி சிங்களவர்களுக்குஒருநீதியா?இந்த இனவாத செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துங்கள் என்றார்.

## பொலிஸார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கவைச் சந்தித்தார்.

இலங்கையின் பொருளாதார மீட்சி தொடர்பான ஆளும் தரப்பின் வேலைத்திட்டம்குறித்துஇதன்போது விரிவாககலந்துரையாடப்பட்டதுடன், இலங்கையின் புதிய பொருளாதார சீர்திருத்த செயற்பாடுகள் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அர்ப்பணிப்பையும் டொனால்ட் லூ பாராட்டினார்.

இந்த சந்திப்பில் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க , ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, இலங்கைக்கானஐக்கியஅமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் தினுக் கொலம்பகே உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

இதேவேளை தெற்கு மற்றும் மத்தியஆசியவிவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் டொனால்ட் லூ எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவையும் சந்தித்தார்.

இலங்கைக்கும் ஐக்கிய அமெரிக்க குடியரசுக்கும் இடையில் தற்போதுள்ள கூட்டாண்மையை மேம்படுத்துவது குறித்து இரு தரப்பினரும் நீண்ட நேரம் கலந்துரையாடியதோடு, தற்போதைய வங்குரோத்து நிலையிலிருந்து நாட்டை கட்டியெழுப்புவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் டொனால்ட் லூவிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வேண்டுகோள் விடுத்தார்.

## பெருந்தோட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்ற நடவடிக்கைளுக்கு முகம்கொடுக்கத் தயாரெனவும் தெரிவித்தார்.

கூட்டுஒப்பந்தம்இருந்தகாலத்தில் 2வருடங்களுக்குஒருமுறைசம்பளம் அதிகரிப்பு செய்யப்பட்ட நிலையில் கடந்த நான்கு வருடங்களாக தொழிலாளர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்படவில்லை எனத் தெரிவித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், டொலரின் பெறுமதி வீழ்ச்சியை சாதகமாக கொண்டு பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிக்க கம்பனிகள் முன்வர வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுநடைபெற்றஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான் மேலும் குறிப்பிட்டதாவது:

தற்பொழுது நடைமுறைப் படுத்தப்படும் நாள் சம்பள முறைமை பொருத்தமற்றதாகும். அந்த முறைமையில் இருந்து மாற வேண்டியது அவசியம். அதற்காக நான்கைந்து வருடங்கள் அவசியப்படும். அதற்காக தோட்ட தொழிலாளர்களை 1000 ரூபா சம்பளத்துடன் காத்திருக்கச் வைப்பதை ஏற்றுகொள்ள முடியாது.

தேர்தல் காலத்தில் ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு தொகையை பெற்றுத்தருவதாக கூறும். எதிர்கட்சிகள் தோட்ட மக்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக மாற்றுவதாககூறினாலும்அதற்கான பொறிமுறை என்னவென்பது கேள்விக்குரியாகும்.

ஆரம்பத்தில் பெருந்தோட்ட தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளத்தில்ஒருரூபாகூட அதிகரிக்க முடியாதென கூறிய நிறுவனங்கள், ஆளும் தரப்பு 1700 சம்பள அதிகரிப்புக்கான வர்த்தமானி அறிவித்தலை விடுத்த பின்பு அடிப்படைச்சம்ளத்தில்200ரூபாவை அதிகரிக்க முன்வந்துள்ளனர். அதனால் சம்பள அதிகரிப்பை செய்ய முடியும்என்றுநிறுவனங்கள் காண்பித்துள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கொட்டகலை மே தினக் கூட்டத்தில் பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு குறித்து அறிவித்தார். ஏப்ரல் 30 ஆம் திகதி பெருந்தோட்ட மக்களுக்கு 1700 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்குவது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு தொழில் அமைச்சர் மனுஷ நாணாயக்காரவினால் வெளியிடப்பட்டது. இது குறித்து சிலர் மக்கள் மத்தியில் சர்ச்சைகளை ஏற்படுத்தி வதந்திகள் பரப்பினர். ஜனாதிபதி இந்த அறிவிப்பைவிடுத்த மறு தினமே அது நடக்காது என்றும் கூறினார்கள்.

இதேபெருந்தோட்டநிறுவனங்கள் 1000 சம்பள அதிகரிப்பை வழங்க முடியாதென கூறினார்கள். அதற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கிலும் இரண்டு தடவைகள் வெற்றி பெற்றிருக்கிறோம். தற்போது மேல்முறையீடு செய்துள்ளனர். குறித்த வழக்கு ஏற்கனவே உள்ள சம்பள நிர்ணய சபை மீதே தொடரப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் மேற்கொள்ளப்போகும் சம்பள விடயத்தில் நிர்ணயச் சபைக்கு தொடர்பில்லை. 1000 ரூபாவுக்கு மேலதிகமாக ஒரு ரூபாவும் கொடுக்க முடியாது என்று கூறிய பெருந்தோட்ட நிறுவனங்கள் 1700 சம்பளஅதிகரிப்புக்கானவர்த்தமானி அறிவிப்புவெளியிடப்பட்டபின்பு1200 ரூபாவாக அடிப்படை சம்பளத்தை உயர்த்த முன்வந்துள்ளனர்.

வழக்கு இடம்பெறுவதால் சம்பள உயர்வு வழங்க முடியாது என்று சட்டம் இல்லை. அது குறித்த எழுத்துமூல அறிவிப்பு சட்டமா அதிபரினால் தொழில் அமைச்சுக்கு அனுப்பட்டிருக்கிறது. பெருந்தோட்ட நிறுவனங்கள் இந்த விடயத்தை இழுபறியாக்கவே பார்க்கின்றார்கள். இது குறித்து ஜனாதிபதியிடமும் பேசியிருக்கின்றோம்.

அதன்படி ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் தொழில் அமைச்சரால் இது குறித் ஆவணமொன்று தயாரிக்கப்படுகிறது. பெருந்தோட்ட நிறுவனங்கள் எந்தெந்த இடத்தில் எல்லாம் சட்டத்தை மீறியிருக்கின்றன? எந்தெந்த இடத்தில் எல்லாம் அவர்கள் இலக்கு இல்லாமல் வேலைசெய்திருக்கின்றார்கள்? மீள் நடுகை செய்யாமலிருப்பதற்கான காரணம் என்ன உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதன்போது ஆராயப்படும்.

இவ்வாறிருக்க பெருந்தோட்ட நிறுவனங்கள் குத்தகை காலத்தை நீட்டித்து தாருமாறு கேட்கிறார்கள். மீள் நடுகைச் செய்தால் இலாபமீட்ட 60 வருடங்கள் ஆகும் என்று கூறுகிறார்கள். 53 வருடங்கள் குத்தகைக்கு காணிகளை பெற்றுக்கொண்டபோதுஅவர்களுக்கு அது விளங்கவில்லையா? அதனால், தற்போது சம்பளத்தை அதிகரிக்க முடியாது என்று கூறுவது நியாயமற்றது. பராமரிப்பு இன்மையினாலேயே தோட்டங்கள் காடாக மாறியுள்ளன.

தோட்டத் தொழிலாளர்கள் தொழில் செய்யும் இடத்தில் கௌரவமாக நடத்தப்படுத்துவதில்லை. அதுவே தொழிலாளர்கள் எண்ணிக்கை குறையக் காரணமாகும். அவர்களுக்கு உரிய அங்கீகாரம் கிடைப்பதில்லை. தேயிலைத் தோட்டத்தில்தேயிலைமாத்திரம்தான் இருக்கும் என்ற நிலை இன்று மாறிவிட்டது.

பங்களாக்கள் சுற்றுலா இடங்களாக மாற்றப்பட்டுள்ளன. அதிலும் நாளாந்தம் 1000 - 2000 டொலர் ஈட்டுகின்றனர். அங்கு தேநீர் நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு இரு முனைகளில்வருமானம்ஈட்டினாலும் நிறுவனங்கள் ஆளும்தரப்புக்கு வெறும் 500 ரூபாவை மாத்திரமே வழங்குகின்றன.

தங்களாலேயேசுற்றுலாத்துறை ஊக்குவிக்கப்படுவதாக கூறிக் கொள்கிறார்கள். இது பெருந்தோட்ட நிறுவனங்களின் சூழ்ச்சியாகும். அதனாலேயே ஜனாதிபதியும் தொழில் அமைச்சரும் எமது கோரிக்கையை ஏற்றுக் கொண்டுள்ளனர் -என்றார்.

## சாட்சியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுப்பப்பட்டுள்ளது.

பிரதீபனின் உறவினர்களும் சம்பவத்தை நேரில் கண்டவர்களில் சிலரும் இந்தக் குற்றச்சாட்டைக் கூறுகின்றனர்.

இலங்கை மின்சார சபையில் பணிபுரியும் ஊழியரான செல்வநாயகம் பிரதீபன் மே 10 அன்று விபத்தில் சிக்கி உயிரிழந்தார். பொலிஸாரின் சமிக்ஞையை மதித்து அவர் மோட்டார் சைக்கிளை நிறுத்தாது சென்ற அவரைத்துரத்திச்சென்றபொலிஸார் அவரது மோட்டார் சைக்கிளை எட்டி உதைத்தனர் என்றும் அதனால் நிலை தடுமாறிய அவர் வீழ்ந்து விபத்துக்குள்ளானார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் மாலை 6:30 மணியளவில் இடம்பெற்றபோது அதனை நேரில் கண்ட சாட்சிகள் உள்ளனர். பொலிஸாருடன் அது தொடர்பில் முரண்பட்டும் உள்ளனர். விபத்தில் சிக்கி காயமடைந்தவரின் உயிரைக் காக்க அவர்கள் முற்பட்டபோதும், அதற்கு அனுமதிக்காத பொலிஸார் அம்புலன்ஸ் வரும் வரைக்கும் காயமடைந்தவரின் அருகில்

தொடர்ச்சி 8ம் பக்கம்....



# தொற்றுநோயை காட்டி கஞ்சிவழங்க தடையேற்படுத்தியதுபோல் வெசாக் பண்டிகை நிகழ்வுகளையும் தடுத்து நிறுத்துவார்களா?

## அருட்தந்தை மா.சத்திவேல் கேள்வி



தொற்று நோய் அபாயத்தைக் காரணம் காட்டி கஞ்சி வழங்க தடையேற்படுத்திய பொலிஸார், அதேபோல் வெசாக் பண்டிகை நிகழ்வுகளையும் தடுத்து நிறுத்துவார்களா? என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவரால் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

உப்பு கஞ்சி பகிர்வோடு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் ஆரம்பித்திருக்கையில் சம்பூர் பொலிஸார் கஞ்சி பகிருதலை தடுப்பதற்காக மூதூர் நீதிமன்றம் தடை உத்தரவை பெற்றிருப்பதோடு நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் என இதுவரை நால்வரைக் கைது செய்துள்ளதாக செய்திகள் வந்துள்ளன. மக்கள் ஒன்று கூடுதல் மூலம் தொற்றுநோய் பரவும் அபாயம் உள்ளது எனவும் காரணம் காட்டி உள்ளனர்.

இது கொரோனா காலத்தில் பயன்படுத்திய சொற் தொடராகும். அதனையே மீண்டும் நினைவேந்தலைத் தடுத்து நிறுத்தும் ஆயுதமாக கையில் எடுத்திருப்பதும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைத் தடுப்பதும் இறந்தவர்கள் மற்றும் கொல்லப்பட்டவர்களை நினைவு கூரும் அடிப்படை உரிமையை மறுக்கும் செயலாகும்.

சம்பூர் பொலிஸார் இத்தகைய அராஜக செயலை அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு வன்மையாகக் கண்டிப்பதோடு எதிர்வரும் வெசாக் பண்டிகையின் போது அதே தொற்று நோய் அபாயத்தை காரணம் காட்டி வெசாக் பண்டிகை நிகழ்வுகளையும் தடுத்து நிறுத்துவார்களா? எனவும் கேட்கின்றது.

பேரினவாத ஸ்ரீலங்கா அரசு சர்வதேச சக்திகள் பேராதரவோடு 2009 இல் இனப்படுகொலையை அரங்கேற்றி கொண்டிருக்கையில் ஆண்கள், பெண்கள் என பெரியோர் முதல் சிறுவர் வரை சதை பிண்டங்களாக இரத்த வெள்ளத்திலும் கொல்லப்பட்டும் காயங்களோடும் உயிருக்காக போராடிக் கொண்டிருக்கையில் இன்னும் ஒரு பக்கம் மக்கள் பட்டினியோடு வெறும் உப்பு கஞ்சிக்காக நீண்ட வரிசையில் மக்கள் காத்துக் கிடந்த பேரவலத்தை தமிழர் வரலாற்றில் மறக்க முடியாது.

இவ்வரலாற்றுபேரவலத்தைநினைவுகூரவும்அநியாயமாக கொல்லப்பட்டவர்களுக்கு, காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதி கேட்கவும் கடந்த 15 வருட காலமாக தமிழர் தாயகம் எங்கும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தில் கஞ்சி பகிர்வதோடுமே18ஆம்திகதிநினைவேந்தல்நடத்தப்படுகின்றது.

உப்பு கஞ்சி மக்களின் நீதிக்கான குரலின் அடையாளமும், ஆயுதமும் ஆகும். இதற்கு எதிராக செயற்படுவதற்கு பொலிஸார் நீதியை மடக்கி தம் பக்கம் சாய்ப்பதும் தமிழர்களின் நீதியின் ஆயுதமான கஞ்சியை தட்டிப்பறித்து நீதி குரலை அடக்க நினைப்பது அராஜகமாகும். சம்பூர் பொலிஸார் பெற்றிருக்கும் நீதிமன்ற தடையுத்தரவை மீளப்பெற வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கின்றோம்.

அத்தோடு, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கஞ்சி பகிர்வு காரணமாக இதுவரை கைது செய்யப்பட்டுள்ளவர்கள் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் திருகோணமலை மாவட்ட உதவி செயலாளர் ஹரிஹர குமார் அவர்களையும் பாடசாலை மாணவி உட்பட பெண் சமூக செயற்பாட்டாளர்களையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என கூறுகின்றோம். இத்தகைய கைதுகள் நீதியை தடுத்து விட முடியாது என்பதையும் உறுதியாக கூறுகின்றோம்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் தொடர்பில் நாம் முல்லைத்தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியோடு உரையாடிய போது சாதகமான பதிலளித்தமை மகிழ்ச்சியே. இவ்வாறு பொலிஸ் நிலையத்தினரும் நடந்து கொள்ள வேண்டும் எனவும் கேட்கின்றோம்.

உப்பு கஞ்சியை சுதந்திரமாக குடிக்கவிடு எனும் மக்களின் நீதி குரலை, அரசியல் குரலை முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் 15 வது ஆண்டிலாவது சர்வதேசத்தின் காதுகளுக்கு எட்ட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. - என்றுள்ளது. (05)

# க.பொ.த. சாதாரணதர பரீட்சையின் ஆங்கில வினாத்தாளை வாட்ஸ்அப் குழுவில் வெளியிட்ட ஆசிரியருக்கு விளக்கமறியல்!

க.பொ.த சாதாரணதரப் பரீட்சையின் ஆங்கில வினாத்தாளை மாணவர்கள் குழுவிற்கு வாட்ஸ்அப் குழுவில் வெளியிட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட மேலதிக வகுப்பு ஆசிரியர் ஒருவர் கண்டி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் இம்மாதம் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவின் அம்பதென்ன குடுகல பிரதேசத்தைச் சேர்ந்த 62 வயதான ரோஹன சந்திரசிறி பெர்னாண்டோ என்பவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவர் கேள்வித்தாள் வெளியான வாட்ஸ்அப் குழுவின் அட்மின் என்பது பொலிஸ் விசார ணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மஹியங்கனைபுஹறெல்யாயபிரதேசத்தில் வசிக்கும் மேலதிக வகுப்பு ஆசிரியர் ஒருவரிடமும் ஹசலக்க பொலிஸார் வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

குறித்த வாட்ஸ்அப் குழுவில் இந்த ஆசிரியரின் இலக்கம் இருந்ததால், அவரின் கைத்தொலைபேசி பொலிஸாரின் பாதுகாப்பில் எடுக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட ஆசிரியரிடம் வாக்குமூலம் மட்டுமே பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும், அவர் கைது செய்யப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட மேலதிக வகுப்பு ஆசிரியரின் தாயார் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியை ஒருவர் என்பதுடன், அவரது தொலைபேசியும் பொலிஸ் பாதுகாப்பில் எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(05)

# ருவெல சமூக சேவை அமைப்பினால் நற்பிட்டிமுனையில் குருதிக் கொடை




(பாறுக் ஷிஹான்)

நற்பிட்டிமுனை ருஜவைவல சமூக சேவை அமைப்பின்பூர்வாங்கசேவையாக கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையுடன் இணைந்து நடத்திய உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம் எனும் தொனிப்பொருளில் மாபெரும் இரத்ததான முகாம் நற்பிட்டிமுனை ருஜவைவல சமூக சேவை அமைப்பின் தலைவர் அப்துல்லாஹ் முகமட் சாஜித் ருவெலசமூகசேவைஅமைப்புதிஷர்விபத்துக் கள்,சத்திர சிகிச்சைகளுக்கான அவரச தேவையை பூர்த்தி செய்யும் வகையில் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்திய சாலைஇரத்தவங்கியில்நிலவுகின்றஇரத்தப் பற்றாக்குறையைநிவர்த்திசெய்யும்முகமாக இந்த இரத்ததான முகாம் நடத்தப்பட்டது.

காலைமுதல்மாலைவரைஅமைப்பின் செயலாளர் அமானுல்லாஹ் முகமட் சாகீர் நெறிப்படுத்தலில் , கல்முனை அஷ்ரப்



தலைமையில் நற்பிட்டிமுனை அல் அக்ஸா மகா வித்தியாலய ஆரம்ப பிரிவில் நேற்று இடம்பெற்றது.

உதிரம் கொடுத்து உயிர் காப்போம் என்பதற்கமைவாக நற்பிட்டிமுனையில் சில வருடங்களாகஇயங்கிவரும்நற்பிட்டிமுனை ஞாபகார்த்த வைத்தியசாலையின் இரத்த வங்கி பொறுப்பாளர் மருத்துவ அதிகாரி வைத்தியர்கிருஸ்ணமூர்த்திவித்தியா,வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்கள்,சமூக அமைப்பின் உறுப்பினர்கள் பொதுமக்கள் என பலரும் பங்கு கொண்டனர். (05)

# மாணவனின் மர்மச் சாவு தொடர்பில் மௌலவிக்கு விளக்கமறியல் நீடிப்பு

(பாறுக் ஷிஹான்)

மாணவனின்மர்மமரணம்தொடர்பில் சந்தேக நபரான மௌலவியை மேலும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று (திங்கட்கிழமை) கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் மௌலவி உட்பட சிசிடிவி காணொளிகளை அழித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலையாகிய 4 சந்தேக நபர்களும் மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன் போது கடந்த தவணைகளில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சிசிடிவி காட்சி உள்ளடங்கிய முக்கிய தடயப்பொருள்களை அழித்த குற்றச்சாட்டு அடிப்படையில் கைதான 4 சந்தேக நபர்களை கடும் நிபந்தனையின் கீழ் பிணையில் விடுதலை செய்யப்பட்ட நிலையில் நேற்று மன்றில் ஆஜராகி இருந்தனர். பின்னர் இரு தரப்பினரின் வாதப்பிரதிவாதங்களின் பின்னர் சந்தேக நபரான மௌலவியை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு னீதிவான் உத்தரவிட்டார். சந்தேகநபரான மௌலவிக்குவிளக்கமறியல் நீடிக்கபட்டு எதிர்வரும் மே மாதம் 27 திகதி வரை வழக்கினை ஒத்தி வைக்குமாறு கல்முனை நீதிவான் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது.

(05)

காலைக்கதிர் Kalaikkathir


# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## அசிங்கமான நடவடிக்கை

தமிழ் இனப்படுகொலையை நினைவுகூர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டதற்கு எதிராக கிழக்கில் பொலிஸார் எடுத்திருக்கும் நடவடிக்கை அசிங்கமானது; ஏற்றுக்கொள்ள முடியாதது; கடும் கண்டனத்துக்குரியது. பௌத்த சிங்கள மேலாதிக்கவாதத்தின் ஏற்கமுடியாத போக்கு அது.

முள்ளிவாய்க்கால்கஞ்சிவடக்குகிழக்கின்அனைத்து இடங்களிலும் வழங்கப்படுகின்றது. நன்கு கொதிக்கக் காய்ச்சப்பட்ட நீரில் தயாரிக்கப்பட்ட உணவு அது. இந்தக் கஞ்சி தீவிரமாகப் பரிமாறப்படத் தொடங்கி மூன்று நாள்களுக்கும் மேலாகிவிட்டபோதும் எங்கும் அதனால் எவரும் நோய்வாய்ப்பட்டதாகத் தகவல் இல்லை. இந்த ஆண்டு மட்டுமல்ல இதற்கு முந்தைய ஆண்டுகளிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி குடித்து யாராவது ஒருவர நோய்வாய்ப்பட்டார் என்று தகவல் இல்லை.

அப்படியிருந்தபோதும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்குவதால் தொற்றுநோய் ஏற்படும் அபாயம் இருப்பதாகத் தெரிவித்து கஞ்சி வழங்கலுக்குத் தடை உத்தரவு பெற்றுள்ளனர் மூதூர் காவல்துறையினர். அப்படியே தொற்றுநோய் அபாயம் இருந்தாலும் அது குறித்து நீதிமன்றத்திற்கு அறிக்கையிடக்கூடியவர்கள் பொதுச் சுகாதார கண்காணிப்பாளர்களே (பி.எச்.ஐ), காவல்துறையினர் எப்படி அதனைச் சொல்ல முடியும் என்று கேள்வி எழுப்பியுள்ளார் முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன். அவரது சுட்டிக்காட்டல் நியாயமானது மட்டுமல்ல ஒரு நீதியரசராக பொருத்தமான தெரிவு நடவடிக்கை எது என்பதை அறிந்தவரது கூற்றும்கூட.

அப்படியிருந்தும் காவல்துறையினர் முன்வைத்த தகவல்அறிக்கையின்அடிப்படையில்முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கலுக்கு நீதிமன்றமும் தடையுத்தரவு வழங்கியுள்ளது. இந்தத் தடை உத்தரவை மீறி கஞ்சி வழங்கினார்கள் என்ற குற்றச்சாட்டில் 3 பெண்கள் உட்பட நால்வரைக் கைது செய்துள்ளனர் காவல்துறையினர். அதுவும் இரவு நேரத்தில் வீடுகளுக்குச் சென்று அவர்களைக் கைது செய்துள்ளனர். பெண்கள் ஆண் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தரையில் தரதரவென இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர். அந்தக் காட்சிகள் தாங்க முடியாத அழுத்தத்தையும் கோபத்தையும் ஏற்படுத்துகின்றன. கைது செய்யச் சென்ற காவல்துறையினருடன் பெண் காவலர்களும் சென்றனர் என்றபோதும் ஆண் காவலர்களே பெண்களைக் கைது செய்து பலவந்தமாக இழுத்துச் செல்கின்றனர். இது காவல்துறை நடைமுறைகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் முரணானதும்கூட. நீதியரசர் விக்னேஸ்வரன்அதனையும்சுட்டிக்காட்டியிருக்கின்றார். தமிழர்கள் என்று வந்துவிட்டால் சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட காவல்துறைக்கு சட்டம், நீதி, நியாயம், நேர்மை எதுவும் ஒரு பொருட்டல்ல என்பதையே அவர்களின் இந்தச் செயற்பாடு மீண்டும் ஒரு தடவை நிரூபித்துள்ளது.

அதுமட்டுமல்ல, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் அம்பிகா சற்குருநாதனும்நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனும் சுட்டிக்காட்டியிருப்பது போன்று உலகத் தொழிலாளர் நாள்பேரணிகளின்போ–தும்பௌத்த கொண்டாட்டமான வெசாக்கின் போதும் இவ்வாறு பல லட்சம் பேருக்கு உணவு வழங்கப்படுவதை தொற்றுநோயைக் காரணம் காட்டி காவல்துறையினரால் தடுத்துவிட முடியுமா? அது முடிடயாதபோது எளியோரிடம் தம் வலிமையைக் காட்டுவதற்கு காவல்துறைக்கு வெட்கமேயில்லையா? இந்த நாட்டில் எப்போதும் சிங்களவர்களுக்கு ஒரு சட்டமும் தமிழர்களுக்கு ஒரு சட்டமுமே நடைமுறையில் உள்ளது. அதனால்தான் தமிழர்கள் தம்மைத் தாமே ஆளும் அதிகாரம் வேண்டும் என்கிறார்கள். அதை நிரூபிக்கும் ஆகப் பிந்திய சம்பவமாக அமைந்துள்ளது முள்ளிவாய்க்கால் கஞ்சிக்கான தடை.

# இயல்பாக இயங்கட்டும் இளையோர்

**என்.மாதவன்**

அண்மையில் தொடருந்துப் பயணம் ஒன்றில் எதிர் வரிசையில் இரு சிறார்கள் அவர்களது பெற்றோருடன் எதிர்ப்பட்டனர். மிகவும் அமைதியாக ஒரு கைப்பேசியில் பொருத்தப்பட்ட ஹெட்போனில் ஆளுக்கொன்றாக காதில் மாட்டி ஏதோ நிகழ்ச்சி ஒன்றை ரசித்துக்கொண்டிருந்தனர். சுமார் அரை மணி நேரம் போயிற்று.

பிறகு ஏதோ ஒரு நிகழ்ச்சிக்கு அக்கா மாற்றியது தம்பிக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறது. அவன் சிணுங்கத் தொடங்கினான். இருவரிடையே வாக்குவாதம் தொடங்கியது. இதனைக் கவனித்த பெற்றோர் அவர்களிடமிருந்து கைப்பேசியை வாங்கி பையில் வைத்துவிட்டனர்.



சிறார் இருவரும் பொழுது போகாமல் செய்வதறியாது திணறிக் கொண்டிருந்தனர். தம்பி கொஞ்ச நேரம் ரயிலுக்கு வெளியே பார்ப்பது, கையை முறுக்குவது என சேட்டை செய்து கொண்டிருந்தான். பிறகு, சகோதரியுடன் சண்டையிடத் தொடங்கினான். கைப்பேசிக்காக அப்பாவை அணுகினான். அம்மாவிடம் கெஞ்சி னான். அவர்கள் மசியவில்லை என்றதும், அவர்கள் இருவரும் நல்ல அப்பா-அம்மாவே இல்லை எனச் சான்றிதழ் கொடுத்தான்.

இத்தனை களேபரத்திலும் அந்த சகோதரி அமைதியாக இருந்தார். அந்தப் பெற்றோர் செய்த நல்ல விஷயம் அவர்களைக் கண்டுகொள்ளாமல் விட்டதுதான். சக பயணிகளான நாங்கள் அவர்களைக் கவனிக்கிறோமா என்பதைப் பொருட்படுத்தவில்லை.

தொடருந்தில் நடைபெற்ற சம்பவத்தில் பெற்றோர் இருவரும் கருத்தொற்றுமையுடன் தங்கள் வாரிசுகளை நடத்தியது ஆரோக்கியமான விஷயம். அவர்களின் 'வளர்ப்புப் பண்பின்' உயர்ந்த வெளிப்பாடு.

தங்கள் குழந்தைகள் சண்டையிடுவது, கூச்சல் போடுவது வளர்ப்புக் கோளாறாக மற்றவர்களால் பார்க்கப்படும் என்ற அச்சத்தில் அவர்களிடம் கைப்பேசியைக் கொடுத்திருக்கும் பெற்றோரைத்தான் இன்று பொதுவாக காண முடிகிறது. உடன்பிறப்புகளிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டில் தலையிட்டு, ஒருவர் செய்வது சரி, மற்றவர் செய்தது தவறு என நடுவராக இல்லாமல், குழந்தைகளை இயல்பாக இயங்கவிட்டது நல்ல பயனை அளித்தது.

ஆனால், எல்லா இடங்களிலும் பெற்றோர் இதுபோல நடப்பதில்லை. குழந்தைகளைப் பொது இடங்களில் பெற்றோர் இயல்பாக இயங்க விடுவதில்லை என்பது அனைவரும் ஒப்புக்கொள்ளும் உண்மை.

பொதுவாக பெற்றோரின் எதிர்பார்ப்பு என்னவாக இருக்கிறது? குழந்தைகள் யாருடனும் அதிகமாகப் பேசக் கூடாது; அடங்கி, ஒதுங்கி இருக்க வேண்டும், இப்படியாக சிறிதும் பெரிதுமாகப் பல எதிர்பார்ப்புகள்.

உண்மையில், குழந்தைகளின் இயல்பு என்பது என்ன? அவர்கள் இயங்கத் துடிப்பவர்கள்; எல்லாவற்றையும் கேள்வி கேட்பவர்கள்; தமக்குப் பிடித்த விஷயங்களை ரசிப்பவர்கள்; பிடிக்காத விஷயங்களை, 'பிடிக்கவில்லை' என்று முகத்தில் அடித்தாற்போல் பகிர்பவர்கள்; கைகளையும் கால்களையும் தமது வசதிக்குப் பயன்படுத்த முனைபவர்கள், ஆடுபவர்கள், பாடுபவர்கள், குறிப்பாக, ஓடியாடி விளையாடத் துடிப்பவர்கள்.

நாம் செய்ய வேண்டியது என்ன? அவர்கள் விளையாடும் இடம் பாதுகாப்பான சூழலாக உள்ளதா என்று உறுதி செய்யலாம்; பாதுகாப்பான மாற்று இடங்களைக் காண்பிக்கலாம்; பாதுகாப்பாக அவர்களால் ஓடியாடி விளையாடும் சூழல் அமையுமானால் அவர்களை இயல்பாக இருக்க விடுதல் என்பதுதான் நல்ல பலனை அளிக்கும்.

பொது இடங்களிலும் குழந்தைகள் பாதுகாப்பாக, சுயமாக இயங்க வேண்டுமானால், அதற்கான பயிற்சியை அவ்வப்போது சிறிது சிறிதாக அளிக்க வேண்டும். 'இந்த இடத்தில் இந்த ஆபத்து இருக்கிறது; ஆபத்தை எதிர்கொண்டால் இப்படியான சிரமங்கள் நேரும்' என்பதை அவ்வப்போது பகிர வேண்டும். பொறுமையை தலையாயதாக கையாண்டு குழந்தைகளைப் பயிற்றுவிக்க வேண்டும்.

பதின்வயதை நெருங்கும் மாணவன் உள்ள ஒரு உறவினர் வீட்டுக்கு சென்றிருந்தோம். நாங்கள் வருவதை அறிந்தவுடன், தனது இரவு உணவை சீக்கிரமே முடித்துக் கொண்டு உறங்கப் போவதாகக் கூறினானாம். அதற்குப் பெற்றோரிடம் அவன் சொன்ன காரணம் - ''விருந்தாளிகள் பெரியவர்களோடு உரையாடுவதுடன் சும்மா யிராமல், என் படிப்பு, பிடித்த பாடம் என்ன? வகுப்பில் எத்தினையாம் பிள்ளை? இப்படி ஆயிரம் கேள்விகள் கேட்டுத் துளைப்பார்கள். இப்படிப் பட்ட கேள்விகளுக்குப் பதிலளித்து எனக்கு அலுத்து விட்டது" என்பதுதான். நாங்கள் அதிகம் பேசாமல் மரியாதையைக் காப்பாற்றிக் கொண்டோம்.

வயது வந்தவர்களை இந்தச் சமூகம் நடத்தும் விதத்துக்கும் குழந்தைகளை, இளையோரை நடத்தும்விதத்துக்கும்இடையேபெரும்வேற்றுமை உள்ளது. சிறார்களின் மன ஓட்டத்தின்படி இயல்பாக இருப்பதை இந்தச் சமூகம் ஏற்றுக் கொள்வதில்லை. அது பெற்றோரின் வளர்ப்புக் குறைபாடாக பார்க்கப்படுகிறது.

குழந்தைகளை, இளையோரைப் புரிந்து நடக்கும் மனநிலை சமூகத்துக்கு உண்டாகும் வரை, இருக்கும்வரை பலவிதமான குழப்பங்களை பெற்றோர் எதிர்கொண்டுதான் ஆக வேண்டும். குழநதைகளின் இயல்பையும் பெற்றோரின் சரியான வளர்ப்பு பண்புகளையும் சமூகம் பயில வேண்டும்.

கைகட்டி, வாய் பொத்தி இருப்பது என்பது குழந்தைகளின் இயல்பான குணம் அல்ல; அது புகுத்தப்படுவது. அது அவர்களின் வெற்றிக்கு வழிவகுக்காது; அவர்களின் கற்றலுக்கும் எதிரான செயல்பாடுகளாகவே அமையும். அவர்கள் பலருடனும் இயல்பாகப் பழகுவதில்லை; எப்போதும் கைப்பேசியுடன் பொழுதைச் செலவிடுகிறார்கள்' என்ற புகார்களையும் பார்க்கிறோம்.

இன்றைய மின்னணு யுகத்தில் கைப்பேசி



அவர்கள் விரும்பியபடியெல்லாம் செயல்படும் நண்பனாக உள்ளது. அந்த நண்பனிடம் குறைவாக நட்பு கொண்டு இயல்பாக நம்முடனும் பழகப் பயிற்றுவிப்பதில்தான் அவர்களின் உண்மை இயல்பை மீட்க முடியும்.

காலைக்கதிர் Kalaikkathir

# 15 வயது மாணவி துஷ்பிரயோகம் பாடசாலை பஸ் சாரதி கைது!

பாடசாலை மாணவியொருவரை ஏமாற்றி ஆள் நடமாட்டமற்ற இடத்திற்கு அழைத்துச் சென்று காரொன்றில் வைத்து பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் பாடசாலை பஸ் சேவை சாரதியொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என குளியாப்பிட்டிய தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

குளியாப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய பாடசாலை பஸ் சேவை சாரதியும் பஸ்ஸின் உரிமையாளருமான இரு பிள்ளைகளின்தந்தையேஇவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

15 வயது பாடசாலை மாணவியொருவரே இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்பட்டுள்ளார்.

சந்தேகநபரும் பாதிக்கப்பட்ட மாணவியும்பாடசாலைபஸ்சேவையின் போது அறிமுகமாகியுள்ள நிலையில் இருவரும் காதல் உறவில் ஈடுபட்டிருந்துள்ளதாக பொலிஸ்விசாரணையில்தெரியவந்துள்ளது. (05)

# ஐங்கரன் விக்கினேஸ்வராவின் 3 நூல்கள் சிட்னியில் வெளியீடு!

சிட்னி தமிழ் மன்றம் ஆதரவில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடும் இலக்கிய அரங்கும் நடைபெற உள்ளது.

பாலஸ்தீனம் எரியும் தேசம், ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல், இலங்கை இதழியலில் சிவகுரு நாதன் ஆகிய ஐங்கரன் விக்கினேஸ்வராவின்மூன்றுநூல்கள்வெளியீடு சிட்னியில் உள்ள பெமுள்வே சமூக மண்டபத்தில் இடம்பெற உள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதி ஜூன் 2024 வெள்ளிக்கிழமை மாலை 1830 முதல் 2100 வரை இந்த வெளியீட்டு நிகழ்வு நடைபெற உள்ளது.

இந்நிகழ்வின் தலைமையுரையை எழுத்தாளர் மாத்தளை சோமு ஆற்றுவார். பாலஸ்தீனம் எரியும்தேசம்நூல்அறிமுகவுரையை தனபாலசிங்கம் நிகழ்த்துவார். அதன்பின் ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல்நூலின்அறிமுகவுரையை டாக்டர் ஹாரூன் காசிம் ஆற்றுவார்.

இலங்கை இதழியலில் சிவகுரு நாதன் நூலின் அறிமுகவுரையை எழுத்தாளர் சுந்தரதாஸ் ஆற்றுவார்.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் தினகரன் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர் சிறப்புரை நிகழ்த்த உள்ளார். அத்துடன்கலாநிதி திருமதி சந்திரிக்கா சுப்ரமண்யன் , திருநந்தகுமார் அவர்களும் சிறப்புரை ஆற்றுவர்.

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் சிட்னியில் நடைபெறும் இந்நிகழ்வில் தினகரன் பிரதம ஆசிரியர்தே. செந்தில்வேலவருடன் சந்திப்பும், நூல்கள் வெளியீடும் நடைபெற உள்ளது.

சிட்னி தமிழ் மன்றம் ஆதரவில் நடைபெறும் நூல் வெளியீடும் இலக்கிய அரங்கின் ஏற்புரையை திரு. ஐங்கரன் விக்கினேஸ்வரா அவர்கள் நிகழ்த்துவார்.(05)

# திருடப்பட்ட மோ.சைக்கிள் மீட்பு சம்மாந்துறையில் இருவர் கைது

(பாறுக் ஷிஹான்)

வீடொன்றில்இருந்த மோட்டார்சைக்கிளை கடத்திய இரு சந்தேக நபர்களை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் சில தினங்களுக்கு முன்னர் மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளதாக சம்மாந்துறை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான குழுவினரின் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன் போது கடந்த சனிக்கிழமை ஒரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டதுடன் அச்சந்தேக நபரிடம் பொலிஸார் முன்னெடுத்த மேலதிக விசாரணையில் பொத்துவில் பிரதேசத்தில் மற்றொரு சந்தேக நபர் தலைமறைவாகி இருக்கிறார் எனத் தகவல் ஒன்று கிடைக்கப்பெற்றிருந்தது.

இது தொடர்பாக பொத்துவில் பொலிஸாருக்குவழங்கப்பட்ட தகவலுக்கமைய கடந்த ஞாயிற்றுக்கிழமை திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டதுடன் திருட்டு சம்பவத்தில் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

இதுதொடர்பானமேலதிகவிசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(05)

# போதைப்பொருள்களுடன் கைதான கணக்காளரின் விளக்கமறியல் நீடிப்பு

(பாறுக் ஷிஹான்)

நீண்டகாலமாகபோதைப்பொருள்விநியோகம்மற்றும் பயன்பாட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரான கணக்காளரை மீண்டும் எதிர்வரும் மே மாதம் 27 ஆந் திகதி வரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

நேற்று (திங்கட்கிழமை) குறித்த சந்தேக நபரை ஆஜர்படுத்திய வேளை மீண்டும் 14 நாள்கள் விளக்கமறியலில் மீண்டும் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.


சந்தேக நபரான கணக்காளர் நீண்ட காலமாக போதைப்பொருள் விநியோகம் மற்றும் பயன்பாட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் மருதமுனை பகுதியில் வைத்து பெரிய நீலாவணை பொலிஸாரால் ஏப்ரல் மாதம் திங்கட்கிழமை(22) இரவு கைது செய்யப்பட்டிருந்தார்.

அண்மையில்மருதமுனைநகரைஅண்டியபகுதியில் ஐஸ் மற்றும் கஞ்சா போதைப்பொருளுடன் கைதான சந்தேக நபரின் வாக்குமூலத்தை அடிப்படையாக கொண்டு பெரிய நீலாவணை பொலிஸார் குறித்த கணக்காளரை கைது செய்ய துரித விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன் போது கணக்காளர் வசம் இருந்து ஐஸ் போதைப்பொருள் 840 மில்லி கிராம் கேரளா கஞ்சா 4 கிராமும் 540 மில்லி கிராமும் மீட்கப்பட்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

மேலும் குறித்த சந்தேக நபர் கடந்த காலங்களில் கல்முனை மாநகர சபையின் முன்னாள் கணக்காளராக பணியாற்றியவர் என்பதுடன் தற்போது அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கணக்காளராகவும் தற்போது பணியில் இருப்பவர் என பொலிஸ் விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது. (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சநேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee
Chikne Fried Rice with
Vegetable
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# கற்பிட்டியில் 10 கோடி ரூபா பெறுமதியான திமிங்கல வாந்தியுடன் ஐவர் கைதாகினர்

கற்பிட்டி கண்டக்குளி பிரதேசத்தில்உள்ளவீடொன்றின்பின்புறத்தில் புதைக்கப்பட்டிருந்த 10 கோடி ரூபா பெறுமதியான திமிங்கல வாந்தியுடன் ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வனாத்தவில்லு பொலிஸ் நிலையத்திற்குக் கிடைத்த தகவலின் பேரில் புத்தளம் பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டசுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த திமிங்கல வாந்தி, கடலில் மிதந்துகொண்டிருந்துள்ளநிலையில் கண்டக்குளி மீனவர்களால் கண்டுபிடிக்கப்பட்டு பின்னர் படகின் மூலம் இரகசியமாக எடுத்து வரப்பட்டு விற்பனை செய்வதற்காகப் பாதுகாப்பாகப் புதைத்து வைக்கப்பட்டிருந்ததாகப் பொலிஸ் விசாரணையில்தெரியவந்துள்ளது.

இந்த திமிங்கில வாந்தியானது 35 கிலோ நிறையுடையது எனவும் இதன் மதிப்பு 10 கோடி ரூபா எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# பொதுச் சுகாதார பரிசோதகர் எனக் கூறி நகை, பணம் கொள்ளை: 3 பேர் கைது

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் எனக் கூறி நகை மற்றும் பணம் உள்ளிட்ட பொருள்களைக் கொள்ளையிட்டதாகக்கூறப்படும்மூன்று சந்தேகநபர்கள் கட்டுநாயக்க பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 9 ஆம் திகதி பெண் ஒருவரை ஏமாற்றி கடத்திச் சென்று நகை மற்றும் பணத்தைக் கொள்ளையிட்டுள்ளதாகக் கட்டுநாயக்க பொலிஸ் நிலையத்திற்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மருதானை, தெமட்டகொடை மற்றும் கொழும்பு 8 ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 38, 47 மற்றும் 70 வயதுடைய மூன்று நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மூவரும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் எனக்கூறிபல்வேறுநபர்களைஏமாற்றிஅவர்களிடமிருந்து நகை மற்றும் பணம் உள்ளிட்ட பொருள்களைக் கொள்ளையிட்டுள்ளதாகப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து 3 காதணிகள் மற்றும் ஒரு மோதிரம் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# யாழ்ப்பாணம் சாட்டிப் பகுதியில் வெடிபொருளுடன் ஒருவர் கைது



யாழ்ப்பாணம் சாட்டி கடற்கரை பகுதியில் இருந்து சுமார் 03 கிலோ வெடிமருந்துகள் உள்ளிட்ட வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளதுடன், அவற்றை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சாட்டி கடற்கரை பகுதியில் வெடிபொருள்கள் காணப்படுகின்றன என, ஞாயிற்றுக்கிழமை பொலிஸ் விசேட அதிரடி படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த விசேட அதிரடி படையினர் 3 கிலோ 145 கிராம் வெடி மருந்துக்கள், ஆர்.பி.ஜி எறிகணைகள் 08 மற்றும் 60 எம்.எம். மோட்டார் எறிகணைகள் 12 என்பவை மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட எறிகணைகள் சிலவற்றில் இருந்து வெடிமருந்துகள் பிரித்து எடுக்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட வெடிபொருள்களும் கைதுசெய்யப்பட்ட நபரும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக ஊர்காவற்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (05)

# சர்வதேச டிஜிற்றல் ஓவியப்போட்டியில் நபீஸ் முகம்மட் ஸமீல் அபார சாதனை



*(ஹெச் எம் ஹலால்தீன் )*

*உலக சுகாதார தினத்தை முன்னிட்டு தெற்காசிய நாடுகளுக்கு இடையில் நடைபெற்ற 12 வயதுக்கு உட்பட்ட பிரிவில் மூதூரைச் சேர்ந்த நபீஸ் முகம்மட் ஸமீல் என்பவர் ர்நடயவா குழச யுடட என்ற தலைப்பில் கீழான டிஜிட்டல் ஓவியம் வரைதல் போட்டியில் தென்னாசிய நாடுகளில் மூன்றாம் இடத்தைப் பெற்று வெற்றிச் சாதனையை நிலைநாட்டியுள்ளார்.*

*தி/மூ/அல்-ஹிலால்மத்தியகல்லூரியைச் சேர்ந்த இவர் தரம் 7 இல் கல்வி கற்கும் மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போட்டியில் முதலிடம்-பங்களாதேஸ், இரண்டாம் இடம் -இந்தியா மூன்றாம் இடம் - இலங்கை (நபீஸ் முகம்மட் ஸமீல்) என்பதும் குறிப்பிடத்தக்கது.*

*இச்சாதனையை நிலைநாட்டிய முகம்மட் ஸமீல் அவர்களுக்கு முத்திதழ் சார்பிலான மற்றும் மூதூர் மண் சார்பிலான வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துள்ளனர். (05)*



காலைக்கதிர்
Kalaikkathir

## சாட்சியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எவரும் செல்லக்கூடாது என்று மிரட்டியுமுள்ளனர்.

நேரம் நீண்டு சென்றதால் பொலிசாருடன் முரண்பட்ட இளைஞர்கள் சிலர் காயமடைந்தவரை முச்சக்கர வண்டி ஒன்றில் ஏற்றி தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். எனினும் அதற்கு முன்னதாகவே பிரதீபன் உயிரிழந்திருந்தார்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பில் சாட்சியம் அளிக்கத் தயார் என்று தெரிவித்தவர்களின் விவரங்களைப் பொலிஸார் பெற்றுள்ளனர். அதன் பின்னர் அவர்களது தொலைபேசிகளுக்கு அழைப்பெடுத்தும் நேரிலும் சாட்சியமளிக்கக்கூடாது என்று அச்சுறுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## முள்ளிவாய்க்கால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹரிஹரகுமார் (வயது 43) ஆகிய நால்வருமே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழக மாணவியைக் கைதுசெய்ததுகுறித்துபொலிஸாரால் நீதிமன்றத்திற்கு ஒரு கதை சொல்லப்பட்டுள்ளது. தேமிலாவின் தாயாரான விஜிதாவைக் கைது செய்ய முற்பட்டபோது அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தேமிலா தனது கழுத்தில் கத்தி வைத்து மிரட்டினார் என்றும் அதனைத் தடுக்க முற்பட்ட பெண் பொலிஸாருக்கு இதனால் காயம் ஏற்பட்டு அவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர் என்றும் அந்தக் கதையில் கூறப்பட்டுள்ளது. இதற்காகவே தேமிலாவைக் கைது செய்தனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## டயானாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காகக் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துவிட்டுச் சென்றேன். ஆனால் ஆளும் தரப்புப் பணம் இல்லை என தெரிவித்து தேர்தலை நடத்தாமல் விட்டுவிட்டது.

நான் நேர்மையாகவே எனது பதவியை இராஜினாமா செய்தேன். அதனாலே நான் மீண்டும் இந்த சபைக்கு வர முடிந்தது. ஆனால் டயனா கமகே நேர்மையற்ற முறையில் செயற்பட்டு வந்ததால், அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி இல்லாமல் போயுள்ளது.

டயனா கமகே இந்த நாட்டுப் பிரஜை அல்ல என்பதை அவர் ஆரம்பத்தில் எங்களுக்கும் மறைத்திருந்தார். அது தொடர்பான உண்மை எமக்கு தெரிய வந்தவுடன் அது தொடர்பில் நாங்கள் நீதிமன்றில் முறையிட்டோம்.

ஆனால் ஜனாதிபதியும் ஆளும் தரப்பும் டயனாவை பாதுகாத்து வந்தன. ஐக்கிய மக்கள் சக்திக்கு எதிராகவும் சஜித் பிரேமதாசவுக்கு எதிராகவும் செயற்பட ஆளும் தரப்பு அவரை வழிநடத்தி வந்தது. அதனாலே நாடாளுமன்றத்தில் ஒவ்வொரு முறையும் எமது கட்சித் தலைவருக்கு எதிராக அவர் உரையாற்றி வந்தார்.

அதேநேரம் டயனா கமகே இராஜதந்திர கடவுச்சீட்டு பெற்றுக்கொள்ள விண்ணப்பித்திருந்தபோது, அவர் இந்த நாட்டு பிரஜை அல்ல என தெரிவித்து, அவருக்கு கடவுச்சீட்டு விநியோகிக்க முடியாது என குடிவரவு குடியகல்வு முன்னாள் கட்டுப்பாட்டு அதிகாரி நாடாளுமன்ற முனனாள் செயலாளருக்கு அறிவித்திருந்தார்.

அத்துடன் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் நான் இந்த சபையில் உரையாற்றும்போது, இந்த சபையில் வெளிநாட்டு பிரஜை ஒருவர் இருக்கிறார். அது தொடர்பில் தேடிப்பார்க்குமாறு சபாநாயகரை கேட்டுக்கொண்டிருந்தேன். ஆனால் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும்வரை சபாநாயகர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மேலும் டயனா கமகேவுக்கு இராஜதந்திர கடவுச்சீட்டு விநியோகிக்க முடியாது என குடிவரவு குடியகல்வு முன்னாள் கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவித்திருந்தபோதும் தற்போதுள்ள கட்டுப்பாட்டு அதிகாரி கடந்த 2022, 09,12 அன்று அவருக்கு இராஜதந்திர கடவுச்சீட்டு வழங்கியுள்ளார்.

அப்போது நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவாகும். எமது நாட்டு பிரஜை அல்லாத ஒருவருக்கு தற்போதுள்ள குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டு அதிகாரி எந்த அடிப்படையில் கடவுச்சீட்டு விநியோகித்தார். அவருக்கு அதற்காக யார் அழுத்தம் கொடுத்தார் என்பது தொடர்பில் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

## ஜனாதிபதித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலுக்கான திகதிகளைத் தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. திகதிகள் அறிவிக்கப்பட்டதன் மூலம் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நாட்டு மக்களிடம் ஒரு நம்பக்கை கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

மேலும், பஸில் ராஜபக்ச மற்றும் பொதுஜன பெரமுனவின் ஏனைய உறுப்பினர்கள் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த முயற்சிக்கின்றனர். ஆனால் அரசியலமைப்பின் படி ஜனாதிபதி தேர்தலே நடத்தப்படவேண்டும். ஜனாதிபதித் தேர்தலுக்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராக உள்ளது. அத்துடன், ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட அதே திகதிகளில் நடைபெறும் நாம் நம்புகின்றோம் என்றார்.

## ராஜபக்ச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர் இடம்பெற்றபோது பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ச, போர் நடக்கின்ற பிரதேசங்களில் 75,000 மக்கள் மட்டுமே உள்ளார்கள் என்று கூறினார். ஆனால் போர் முடிந்த பின்னர் 4 லட்சத்து 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வவுனியா இடைத்தங்கல் முகாம்களுக்குக் கொண்டு வரப்பட்டார்கள்.

75 ஆயிரம் மக்களுக்கு உணவு அனுப்பி 400,000 மக்களைப் பட்டினியில் போட்டு எம் மக்கள் சாகடிக்கப்பட்டார்கள். அப்படி எத்தனை ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டார்கள்? கஞ்சிக்காக வரிசையில் நின்ற குழந்தைகள் மீது குண்டுகள் வீசப்பட்டு அவர்கள் கொல்லப்பட்டார்கள். இதனைச் செய்தவர் கோட்டாபய ராஜபக்ச.

69 இலட்சம் சிங்கள வாக்குகளினால் நான் ஜனாதிபதியானவன். எனக்குத் தமிழ் வாக்குகள் தேவையில்லையென மார்தட்டி வந்த கோட்டாபய ராஜபக்சவை அதே சிங்கள மக்கள், அதே சிங்கள இளைஞர்கள் அரகலய போராட்டத்தின் மூலம் ஓட ஓட விரட்டியடித்தார்கள். தர்மம் வென்றது. கர்மம் அவரை நாட்டிலிருந்து அகற்றியது. இருக்க இடமில்லாமல் தெருத்தெருவாக திரிந்தார்.

இறந்துபோன முள்ளிவாய்க்கால் ஆத்மாக்கள் இன்றும் கோட்டாபய ராஜபக்சவை நிம்மதியாக உறங்க விடவில்லை. 1 லட்சத்து 46 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டதற்குக் காரணமாக இருந்த ராஜபக்ச குடும்பத்தை சேர்ந்தவர்கள் எந்தக்காலத்திலும் நிம்மதியோடு இருக்கப்போவதில்லை என்பதையும் உறங்கப்போவதில்லை என்பதையும் கர்மவினையும் வரலாறும் அவர்களுக்குக் கற்பிக்கும்.

75 ஆயிரம் மக்களுக்கு உணவு அனுப்பி அங்கு இந்தளவு மக்கள்தான் இருக்கின்றார்கள் என்று கூறி ஆயிரக்கணக்கான மக்களைப் பட்டினியால் கொன்றவர்களுக்கு இந்த உலகம் என்ன தண்டனை வழங்கப்போகின்றது? மக்கள் அங்குள்ள ஐ.நா.அமைப்புக்கள், செஞ்சிலுவைச் சங்கம் போன்றவற்றின் முன்னாள் நின்று எங்களை விட்டுப்போகாதீர்கள் எனக் கதறியபோது இந்த அமைப்புக்கள் மூடைமுடிச்சுகளுடன் வன்னியிலிருந்து வெளியேறின.

ஆதரவு குரல் எழுப்பிக் கதறிய அந்த மக்களைத் தெருவிலே விட்டு இந்த அமைப்புக்கள் தப்பியோடின. இவர்கள் கைவிட்டு ஓடியதால் அத்தனை ஆயிரம் மக்கள் அந்த மண்ணில் கொல்லப்பட்டார்கள். இதற்கு ஐ.நா.மற்றும் சர்வதேச அமைப்புக்கள் பொறுப்பு சொல்ல வேண்டும்.

வெள்ளைக் கொடியுடன் வந்தவர்கள் கொல்லப்பட்டதற்கு நோர்வே சமாதானத்தூதுவர் எரிக் சொல் ஹெய்மும் பொறுப்புக்கூற வேண்டும். இன்றும் தமிழர் தெருவில் நிற்பதற்கு யார் காரணம்?

போருக்கு இலங்கை அரசுக்கு ஆயுதம் வழங்கிய நாடுகள் போர் முடிந்த பின்னர் தமிழர் பிரச்சினைக்கு ஏன் தீர்வு வழங்க முன்வரவில்லை? ஏன் இந்த நாடுகளினால் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க முடியவில்லை? ஆகவே நாங்கள் பேச முடியாத மனிதர்களாக, அநாதைகளாக, உலகப்பந்தில் ஒதுக்கப்பட்ட ஒரு இனமாக இருக்கின்றோம். தமிழ்த் தேசிய இனம் தொடர்ந்தும் அழிக்கப்படுகின்றது. அந்த இனத்தின் நிலம், உரிமைகள் பறிக்கப்படுகின்றன - என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் போராட்டம்




இலங்கையில் உள்ள அரச பல்கலைக்கழக போதனைசாரா ஊழியர்கள் 12 நாள்களாக முன்னெடுக்கும் தொடர் பணி பகிஷ்கரிப்பின் ஓர் அங்கமாக, கிழக்கு பல்கலைக்கழக ஊழியர்கள் முன்னெடுத்த ஆர்ப்பாட்ட நிகழ்வு நேற்று மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் நடைபெற்றது.

மட்டக்களப்பில் அமைந்துள்ள கிழக்குப் பல்கலைக்க வெளிவாரி கற்கைகள் நிலையம் முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்க தலைவர் ஏ.ஜெகராஜு தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப் பாட்டத்தில் கிழக்கு பல்கலைக்கழகத்தின் கல்விசாரா ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

பல்வேறு கோரிக்கைகளை முன்னிறுத்தி நடைபெற்ற இந்த போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் சம்பள உயர்வு உட்பட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

நேற்று நடைபெறும் அமைச்சரவை கூட்டத்தில், பல்கலைக்கழக ஊழியர்களின் 107 வீத சம்பள அதிகரிப்பு மற்றும் மாதாந்த இழப்பீட்டுக் கொடுப்பனவு அதிகரிப்பு குறித்த இரண்டு அமைச்சரவை பத்திரங்களும் அமைச்சரவையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்வு வழங்கப்படாவிடில் இலங்கையில் உள்ள அரச பல்கலைக்கழக நடவடிக்கைகளில் ஏற்படும் செயலிழப்பின் முழுப் பொறுப்பையும் அரசாங்கமும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் ஏற்க வேண்டும் என கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர்கள் இதன்போது வலியுறுத்தியுள்ளனர்.

கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்க தலைவர் ஏ.ஜெகராஜு இங்கு கருத்து தெரிவிக்கையில் -

நேற்று நடைபெறும் அமைச்சரவை கூட்டம் பல்கலைக்கழக ஊழியர்களுக்கு மாத்திரமன்றி பல்கலைக்கழக மாணவர்களுக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனெனில், கடந்த 11 நாள்களாக பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டுள்ளதால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் மட்டுமல்லாது ஆராய்ச்சி, ஆய்வுகூட செயற்பாடுகள், மருத்துவ பரிசோதனைகளும் தடைப்பட்டுள்ளன. பரீட்சைகள், சர்வதேச மாநாடுகள் மற்றும் முக்கிய கூட்டங்கள் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

ஆராய்ச்சி நடவடிக்கைகள் தாமதமாகுவதால் இலங்கை பல்கலைக்கழகங்கள், சர்வதேசதரப்படுத்தலில் சவால்களைச் சந்திக்கும் அபாயம் உள்ளது. வைத்திய பரிசோதனைகள் தடைப்படுவதால் நோயாளிகள் அசௌகரியங்களைச் எதிர்நோக்குகின்றனர்.

இதன் காரணமாக அரச பல்கலைக்கழக கட்டமைப்பு சீர்குலைந்து இலங்கையில் கல்வி பயிலும் சர்வதேச மாணவர்கள் மத்தியில் இங்குள்ள பல்கலைக்கழகங்கள் குறித்து விமர்சனங்கள் உருவாக வாய்ப்பாக அமையும். இது வெளிநாட்டு மாணவர்கள் இலங்கை பல்கலைக்கழகங்களை தெரிவு செய்வதில் செல்வாக்குச் செலுத்தும்.

பல்கலைக்கழக ஊழியர்களின் சம்பள கோரிக்கையை அமைச்சரவை உபகுழு ஊடாகக் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டு தீர்வு வழங்குவதாக அரசாங்கமும், அமைச்சரும், உரிய திணைக்களங்களும் நாடாளுமன்றத்திலும் நிருவாக ரீதியிலும் கருத்து தெரிவித்தபோதும் அதற்கான எழுத்துமூல உடன்பாடுகளை இதுவரை வெளியிடாமல் வாக்குறுதிகளை மட்டுமே வழங்கி வருகின்றனர். இது பல்கலைக்கழக சமூகத்தால் ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்வல்ல.

சம்பள திருத்தம் தொடர்பில் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றபோதும் அவற்றை பரிசீலிக்க போதிய பணமில்லை எனக் கூறும் அரசாங்கம் சில தரப்புக்கு சம்பள மற்றும் கொடுப்பனவு உயர்வுகளைச் செய்ய எங்கிருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டது என்ற கேள்வி எழுகின்றது.

பல்கலைக்கழக ஊழியர்களின் சம்பள உயர்வு கோரிக்கை புதிய கோரிக்கையல்ல. இது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, நிதியமைச்சு, திறைசேரி, முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் என்பனவற்றால் ஏற்றுக்கொள்ளப்பட்டு கடந்த 8 வருடங்களாக இழுத்தடிப்புச் செய்யப்பட்டுவரும் பிரச்சினையாகும்.

இக்கோரிக்கைகளை முன்னிறுத்தி பல்வேறு பேச்சுகள், தொழிற்சங்க நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டபோதும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்வை வழங்காது காலம் தாழ்த்தி வருவதன் விளைவே பல்கலைக்கழக போதனைசாரா ஊழியர்களை தொடர் பணி பகிஷ்கரிப்புக்கு இட்டுச் சென்றது.

அரசாங்கம் அமைச்சரவையில் தீர்க்கமான முடிவெடுத்து உரிய தீர்வு வழங்காதும், இத்தொடர் பணி பகிஷ்கரிப்பைக் கண்டுகொள்ளாதும் விடுமேயானால் இப்பகிஷ்கரிப்பு கடந்த நாள்களைவிட இறுக்கமாக்கப்பட்டு, பகிஷ்கரிப்புக்கு மத்தியிலும் மனிதாபிமான அடிப்படையில் எமது ஊழியர்களால் முன்னெடுக்கப்படும் அத்தியாவசிய சேவைகளை மட்டுப்படுத்தவும் வலிகோலும்.

இதனால் பல்கலைக்கழக பயிர் மற்றும் விலங்குப் பண்ணை பராமரிப்புகள் பாதிக்கப்படுவதோடு நீர்வழங்கள், மின்சாரம் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளை ஊழியர்கள் புறக்கணித்தால் பல்கலைக்கழகங்கள் பௌதீக மற்றும் பொருளாதார ரீதியான இழப்புகளைச் சந்திக்க நேரிடும். - என்றார். (05)



# யாழ். பல்கலை ஊழியர்களும் நேற்று பணிப்பகிஷ்கரிப்பு போர்!




யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மற்றும் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.

நேற்று (திங்கட்கிழமை) காலை 10 மணியளவில் யாழ் பல்கலைக்கழக நுழைவாயிலில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. (05)

# வவுனியா பல்கலை ஊழியர்கள் நேற்றுக் கவனவீர்ப்பு போராட்டம்






பல்கலைக்கழக ஊழியர் சங்கம் சம்பள உயர்வு கோரி நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா பல்கலைக்கழக பூங்காவீதி அலுவலகத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த தன் பின்னர் அலுவலக வாயிலில் இருந்து ஆரம்பமான ஊர்வலம் ரயில் வீதியூடாக பழைய பஸ் நிலையம் வரை சென்று அங்கு கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது எம்.சி.ஏ. கொடுப்பனவை அதிகரி, அரசே 107 வீத சம்பள அதிகரிப்பை வழங்கு போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளை தாங்கிவாறு ஊர்வலத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது வவுனியா பல்கலைக்கழக கல்விசார் ஊழியர் சங்கம் மற்றும் மாணவர் சங்கமும் ஆதரவு வழங்கியிருந்தது. (05)

# பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தால் கண்டியிலும் நேற்று கவனவீர்ப்பு போர்!



கண்டி நகரில் நேற்று முற்பகல் 11.30 மணிக்கு பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களால் வேலை நிறுத்தப் போராட்டம் மேற்கொள் ளப்பட்டது.

மேலும், பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் தங்கள் கோரிக்கை தொடர்பில் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படாது போனால் தீவிரமான முறையில் வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுவது மட்டுமன்றி அத்தியாவசிய சேவைகளில் இருந்தும் ஒதுங்கிக் கொள்ளப்போவதாக பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் கள் சங்கம் எச்சரித்துள்ளது. (05)

## வற்றாப்பளை அம்மனுக்கு விளக்கெரிக்க

# முல்லைத்தீவு பெருங்கடலை நோக்கி எடுத்துச் செல்லப்பட்ட தீர்த்தக்குடம்



வரலாற்றுச்சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தினுடைய வருடாந்த பொங்கல் உற்சவத்தின் மிகச் சிறப்பம்சமாகக் காணப்படுகின்ற உப்பு நீரிலே விளக்கு எரிப்பதற்காக தீர்த்தமாடுகின்ற உற்சவம் நேற்று (திங்கட்கிழமை) மிகவும் பக்தி பூர்வமாக ஆரம்பமாகியுள்ளது.



முள்ளியவளைகாட்டுவிநாயகர்ஆலயத்திலேயே

விசேட வழிபாடுகள் இடம் பெற்றதைத் தொடர்ந்து முல்லைத்தீவு பெருங்கடலிலே தீர்த்தம் எடுப்பதற்காக தற்போது தீர்த்தக்குடம் முள்ளியவளை காட்டு விநாயகர் ஆலயத்திலிருந்து பாரம்பரிய வீதிகளூடாக முல்லைத்தீவு பெருங்கடலை நோக்கி கொண்டு செல்லப்பட்டிருக்கின்றது.

முல்லைத்தீவு பெருங்கடலுக்குத் தீர்த்தக்குடம் கொண்டுசெல்லப்பட்டு அங்கு விசேட வழிபாடுகளைத் தொடர்ந்து முல்லைத்தீவு பெருங்கடலிலே தீர்த்தம் எடுக்கப்பட்டு வழமை போன்று பாரம்பரிய வழிகளூடாக மீண்டும் முள்ளியவளை காட்டு



விநாயகர் ஆலயத்தை வந்தடைந்து அங்கே காட்டு விநாயகர் ஆலயத்திலே விசேடமாக உப்பு நீரில் விளக்கெரிக்கின்ற கண்கொள்ளாக் காட்சி இடம்பெற இருக்கின்றது.

தீர்த்தக்குடம் மீண்டும் முள்ளியவளை காட்டு விநாயகர் நோக்கிச் செல்லும் பாதையிலே பக்தர்கள் தீர்த்த குடத்தை வரவேற்பதற்காகக் கும்பங்கள் வைத்து தேங்காய்கள் உடைத்து வழிபடுவதற்காகத் தயாராகி வருகின்றனர்.(05)

# குருதியால் தோய்ந்த நம் தேசத்திற்காய் ஒரு துளி

2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை செய்யப்பட்ட நம்முயிர்த்தமிழ்மக்களைநினைவேந்தி குருதிக் கொடை செய்வோம்.

இன்று (14.05.2024) செவ்வாய்கிழமை, காலை 09.00 - மாலை 03.00, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முதன்மைவளாகத்தில் இந்தக் குருதிக்கொடை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரையும் உணர்வுரிமையுடன் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகச்சமூகம் இந்த நிகழ்வில் கலந்துகொள்ள அழைத்து நிற்கின்றது.

(05)

# தேவஹுவ கிராமதில் முதல் சட்டத்தரணி

## பாத்திமா நிஸ்ரா சத்தியப் பிரமாணம்



( ஐ. ஏ. காதிர் கான் )

தேவஹுவ - புலனவெள கிராமத்தைச் சேர்ந்த திருமதி நிஸ்வர்தீன் பாத்திமா நிஸ்ரா, இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசின் உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக, உயர் நீதிமன்றத்தில் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில், திங்கட்கிழமை சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

தேவஹுவ முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைப் பயின்ற இவர், தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவப் பீடத்திற்குத் தெரிவானார்.

இவர் அங்கு ஆங்கில மொழி மூலம்வாயிலாக,முகாமைத்துவமும் தகவல் தொழிநுட்பப் பிரிவில் 'விஞ்ஞானமாணி' (BSE IN MIT) பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

மேலும், ஆங்கிலமொழி ஊடாக சிறப்புச் சித்தி பெற்று 'சிறப்புச் சட்டமாணி' என்ற பட்டத்தையும் ஐ.எல்.எல்.பி. சூட்டிக்கொண்டார்.

சட்டக்கல்லூரியால்நடத்தப்படும், சட்டத்தரணிகளுக்கான இறுதிப் பரீட்சையிலும்தோற்றி சித்தியடைந்துள்ள பாத்திமா நிஸ்ரா, தேவஹுவ கிராமத்தின் முதலாவது சட்டத்தரணியாகத் தேர்வாகி, தனது கிராமத்திற்கும் தனது பெற்றோருக்கும் பேரும் புகழும் சேர்த்துள்ளார். அத்துடன், சிரேஷ்ட சட்டத்தரணி சிராஸ் நூர்தீனிடம் இதற்கான ஆரம்பப் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டதையும் இவர், நன்றியுடனும் பெருமையுடனும் நினைவு கூர்ந்துள்ளார்.

இளம் வயதிலேயே சட்டத்தரணியாக புகழ் நாமம் சூட்டிக்கொண்ட இவர், தேவஹுவவைச் சேர்ந்த நிஸ்வர்தீன் - நிஸ்பா தம்பதியினரின் மூன்றாவது புதல்வியுமாவார்.

திருமதி நிஸ்வர்தீன் பாத்திமா நிஸ்ராவின் மூத்த சகோதரிகளான திருமதி நிஸ்வர்தீன் பாத்திமா நிஸ்கா, திருமதி நிஸ்வர்தீன் பாத்திமா நிஸ்திகா ஆகியோர், தேவஹுவ முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் ஆசிரியைகளாகப் பணியாற்றி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.(05)

# பாணந்துறை அம்பலந்துவை கிராமத்தின் முதலாவது சட்டத்தரணியாக சௌக்க அலி



(ஐ. ஏ. காதிர் கான்)

பாணந்துறை - அம்பலந்துவை கிராமத்தின் முதலாவது சட்டத்தரணியாக றிஸான் சௌக்கத் அலி, கொழும்பு உயர் நீதிமன்றத்தில் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில், சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர், மர்ஹும் சௌக்கத் அலி - முன்னாள் ஆசிரியை ஜனீபா உம்மா தம்பதியினரின் புதல்வருமாவார்.

பாணந்துறை - அம்பலந்துவை இல்மா வித்தியாலயத்தின் பழைய மாணவரான றிஸான், தனது பெற்றோருக்கும், பாடசாலைக்கும், கிராமத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.(05)

# மாற்றுத்திறனாளிகள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் கலந்துரையாடல்



மாற்றுத்திறனாளிகள் எதிர்கொள்ளும் சவால்கள், பிரச்சினைகள், தற்பொழுது காணப்படும் வாய்ப்புக்கள் மற்றும் அவற்றை உரிய முறையில் நிவர்த்தி செய்வதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் முன்மொழிவுகள்பற்றியதகவல்களைக் கலந்துரையாடுவதற்கான விசேட செயலமர்வு, மாற்றுத்திறனாளிகள் பற்றிய நாடாளுமன்ற ஒன்றியத்தின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்று மேற்படி கலந்துரையாடலில் ஒன்றியத்தின் இணைத்தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் மதுரவிதானகே, மாவட்ட பதில் அரசாங்க அதிபர், இயலாமையுடைய நபர்களுக்கான சங்கங்களின் ஒன்றிணைந்த முன்னணியின் தலைவர் ரசாஞ்சலி பத்திரகே, தேசிய ஜனநாயக நிறுவனத்தின் ஆலோசகர் சியாமா சல்காது, யாழ். மனித உரிமை ஆணைக்குழுவின் இணைப்பாளர் ரி.கனகராஜ் வடமாகாண மகளீர் விவகார அமைச்சின் செயலாளர் பொ.வாகீசன் ,பிரதேச செயலாளர்கள்,திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள் மாற்றுவலுவுள்ளோர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ,மாற்றுத்திறனாளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (05 - 113)



# ஏல மனு கோரல்

(நூருல் ஹுதா உமர்)

இலங்கையின் முக்கிய வர்த்தக நகரங்களில் ஒன்றான கல்முனை மாநகர மக்களின் நீண்ட நாள் தேவையாக இருந்து வந்த மக்கள் வங்கி கிளை கட்டடத்திற்கான தேவையறிந்து திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான, ஸ்ரீ.ல.மு.கா. பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாக கட்டட நிர்மாணிப்பு பணிகளை மேற்கொள்ள மக்கள் வங்கிதலைமையகத்தால்ஏலமனு கோரப்பட்டுள்ளது.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களிடமும், மக்கள் வங்கித் தலைவர் மற்றும் உயர் அதிகாரிகளிடமும் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய இடம்பெற்ற ஆலோசனைகளின் பேரில் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்க முன்னாயத்த பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக இழுபறி நிலையில் இருந்த இந்த வங்கிக் கிளை கட்டடத் தொகுதி அமைப்பது தொடர்பில் கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் மக்கள் வங்கி தவிசாளரை சந்தித்து கல்முனை மாநகர பொதுமக்களும், வர்த்தகர்களும் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் சிக்கல்களை எடுத்துரைத்து துரித கதியில் இந்தக் கட்டடம் அமைக்க வேண்டிய அவசியம் தொடர்பிலும் வலியுறுத்தியிருந்தார். அன்றே இந்த வேலைத் திட்டத்தை ஆரம்பிக்கத் தேவையான நிதியை அன்றே அவர் ஒதுக்கீடு செய்திருந்த நிலையில் இப்போது அந்த கட்டடத்தை நிர்மாணிக்க விலைமனு கோரப்பட்டுள்ளது.

இந்த வங்கிக் கிளை நிரந்தர கட்டடத்தில் கல்முனை மாநகரில் அமைய இருப்பதனூடாக கல்முனை மாநகர மக்கள் மற்றும் வர்த்தகர்கள் முழுமையாக நன்மை அடைவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

## குளியாப்பிட்டியவில் இளைஞர் கொலை

### காதலி கைது

குளியாப்பிட்டிய பகுதியில் இளைஞரொருவர் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் அவரது காதலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலுக்ஹென வஸ்ஸவுல்ல பகுதியில் வசிக்கும் 18 வயதுடைய காதலியான சந்தேகநபர், கொலை செய்ய உதவியமை மற்றும் கொலை குற்றத்தை மறைத்தமை ஆகிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது -

குளியாப்பிட்டிய, கபலேவ பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய சுசித ஜயவன்ஸ என்ற இளைஞன் ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி காணாமல்போனார்எனத்தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இந்நிலையில், காணாமல்போன இளைஞன் மாதம்பேயில் பனிரெண்டாவ வனப்பகுதியில் மே மாதம் 7 ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்டார்.

கொலை செய்யப்பட்டு எரிக்கப்பட்டு வீசப்பட்ட நிலையில் இளைஞனின் சடலம் காணப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து காதலி, பிரதான சந்தேகநபரும் அவரது மனைவியும், பிரதான சந்தேகநபரின் இரண்டு மகன்களும், பிரதான சந்தேகநபரின் சகோதரி மற்றும் அவரது கணவரும் தலைமறைவாகி இருந்தனர்.

இந்நிலையில், பிரதான சந்தேகநபரான 'சிங்கிதி' எனப்படும் சுஜித் பெர்னாண்டோ மற்றும் அவரது மனைவி டிலானி ரசிகா ஆகியோர் கடந்த மே மாதம் 06 ஆம் திகதி சட்டத்தரணிகள் ஊடாக நீதிமன்றத்தில் சரணடைந்ததையடுத்து விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.(05)

## யாழ். வீதி விபத்தில் இளைஞர் காயம்

*யாழ்ப்பாணம் இலுப்பையடிச் சந்திப் பகுதியில் ஜீப் ரக வாகனமொன்று மோட்டார் சைக்கிளுடன் மோதி ஏற்பட்ட விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார்.*

*இந்த விபத்து ஞாயிற்றுக் கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.*

*மேற்படி சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது -*

*யாழ்ப்பாணம் நாவலர் வீதியால் பயணித்த ஜீப்ரக வாகனம் இலுப்பையடிச் சந்தியை கடக்க முற்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாணம் பலாலி வீதியூடாக புன்னாலைக்கட்டுவன் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் இலுப்பையடிச் சந்தியை கடக்க முற்பட்ட போது மேற்படி விபத்து இடம்பெற்றுள்ளது.*

*விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞனின் கால்கள் முறிவடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தி யசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப் பட்டுள்ளார்.*

*சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)*







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.05.2024இல் வெளியிடப்பெற்றது